# அம்பாசமுத்திரம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

## 2023 - 24

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

அனுப்புநர்

திரு.இரா இராஜேஸ்வரன்.,

ஆணையாளர்,

நகராட்சி அலுவலகம்,

அம்பாசமுத்திரம்

திருநெல்வேலி மாவட்டம்

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,

திருநெல்வேலி மாவட்டம்.

**ந.க.எண். 877/2022/எப்1,** **நாள். 24.07.2024.**

ஐயா / அம்மையீர்,

பொருள்: அம்பாசமுத்திரம் நகராட்சி – நிர்வாக அறிக்கை 2023 – 24 அறிக்கை அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை: நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண். 26/2021/ஆ1, நாள். 23.07.2024

---------

அம்பாசமுத்திரம் நகராட்சியின் 2023 – 24ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்

அம்பாசமுத்திரம் நகராட்சி

இணைப்பு:

நிர்வாக அறிக்கை – 2023 – 24

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி.

# அம்பாசமுத்திரம் நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2023–2024

அம்பாசமுத்திரம் நகராட்சியானது தமிழ்நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கு பகுதியில் தாமிரபரணி நதிக்கரையோரத்தில் அமைந்துள்ளது. சேரன்மகாதேவி கோட்டம், அம்பாசமுத்திரம் தாலுகாவில் அமைந்துள்ள அம்பாசமுத்திரம் நகராட்சி தாலுகாவின் தலைமையிடமாகும். அரசாணை எண் (பவ) 70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.06.2004ன் படி பேரூராட்சியிலிருந்து மூன்றாம் நிலை நராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அரசாணை எண் (பவ) 154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 09.08.2010ன் படி இரண்டாம் நிலை நராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சியானது 17.84 சதுர கீலோ மீட்டர் பரப்பளவில் அம்பாசமுத்திரம், ஊர்காடு 1 மற்றும் ஊர்காடு 2 ஆகிய 3 வருவாய் கிராமங்கள் அடங்கியதாகும். இந்நகரத்தின் மக்கட்தொகை 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 35,645 ஆகும். தற்போதைய மக்கட்தொகை சுமார் 38,000 ஆகும்.

இந்நகரம் திருநெல்வேலியிலிருந்து மேற்காக 35 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரமானது தரைவழி போக்குவரத்து இணைப்பினாலும், இரயில்வே போக்குவரத்து இணைப்பினாலும் அனைத்து முக்கிய நகரங்களோடும் இணைக்கப்பட்டுள்ளது. அருகில் அமைந்துள்ள இரயில் நிலையங்கள் அம்பாசமுத்திரம் (2 கி.மீ.), திருநெல்வேலி (40 கி.மீ,). விமான நிலையம் தூத்துக்குடி (75 கி.மீ.).

**மக்கள் தொகை 2011**

| வார்டு எண் | மொத்த மக்கள் தொகை | | | தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை | | | பழங்குடியினர் மக்கள் தொகை | | | வார்டு வரையறை இன்படி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | வீடுகள் | மக்கள் தொகை |
| 1 | 1378 | 688 | 690 | 15 | 8 | 7 | 0 | 0 | 0 | 644 | 1674 |
| 2 | 1674 | 824 | 850 | 1239 | 599 | 640 | 47 | 25 | 22 | 692 | 1799 |
| 3 | 1547 | 807 | 740 | 229 | 106 | 123 | 4 | 1 | 2 | 716 | 1862 |
| 4 | 2019 | 972 | 1047 | 718 | 346 | 372 | 0 | 0 | 0 | 683 | 1776 |
| 5 | 2157 | 1087 | 1070 | 1368 | 672 | 696 | 1 | 1 | 1 | 719 | 1869 |
| 6 | 1782 | 855 | 927 | 23 | 10 | 13 | 0 | 0 | 0 | 676 | 1758 |
| 7 | 1724 | 848 | 876 | 8 | 5 | 3 | 0 | 0 | 0 | 696 | 1810 |
| 8 | 1699 | 812 | 887 | 2 | 1 | 1 | 11 | 4 | 7 | 709 | 1843 |
| 9 | 2022 | 991 | 1031 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 689 | 1791 |
| 10 | 2382 | 1186 | 1196 | 6 | 3 | 3 | 0 | 0 | 0 | 657 | 1708 |
| 11 | 905 | 435 | 470 | 80 | 39 | 41 | 0 | 0 | 0 | 576 | 1498 |
| 12 | 1507 | 743 | 764 | 40 | 18 | 22 | 0 | 0 | 0 | 575 | 1495 |
| 13 | 1706 | 806 | 900 | 892 | 427 | 465 | 16 | 9 | 7 | 577 | 1500 |
| 14 | 2027 | 984 | 1043 | 2 | 1 | 1 | 0 | 0 | 0 | 716 | 1862 |
| 15 | 2154 | 1052 | 1102 | 12 | 6 | 6 | 5 | 2 | 3 | 623 | 1620 |
| 16 | 1497 | 710 | 787 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 666 | 1732 |
| 17 | 1576 | 738 | 838 | 42 | 15 | 27 | 0 | 0 | 0 | 634 | 1648 |
| 18 | 1318 | 639 | 679 | 6 | 4 | 2 | 3 | 2 | 1 | 617 | 1604 |
| 19 | 1516 | 735 | 781 | 14 | 14 | 0 | 0 | 0 | 0 | 586 | 1524 |
| 20 | 1550 | 760 | 790 | 592 | 270 | 322 | 0 | 0 | 0 | 621 | 1615 |
| 21 | 1505 | 733 | 772 | 408 | 199 | 209 | 0 | 0 | 0 | 637 | 1656 |
| | **35645** | **17405** | **18240** | **5696** | **2743** | **2953** | **87** | **44** | **43** | **13709** | **35644** |

மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் ஒதுக்கீடு

| பதவி | ப.இ. (பொது) | ப.இ.(பெண்) | பெண் (பொது) | பொது |
|---|---|---|---|---|
| தலைவர் | – | – | – | √ |
| உறுப்பினர் | வார்டு: 13 | 2, 5 | 6,8,11,14,15,16,17,18,19 | 1,3,4,7,9,10,12,20,21 |

பணியாளர் அமைப்பு (அரசாணை எண் 10 ந.நி.கு.வ. துறை 23.01.2023 படி)

| வ. எண் | பணியிடம் | ஊதியம் | எண்ணிக்கை | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | தோற்விக் கப்பட்டது | நிரப்ப பட்டது | காலி யிடம் | |
| | பொது பிரிவு | | | | | |
| 1 | மேலாளர் (நிலை 4) | Level 11 - 35400-130400 | 1 | 1 | | |
| 2 | கணக்காளர் (நிலை 5) | Level 10 - 20600-75900 | 1 | 1 | | |
| 3 | வருவாய் ஆய்வாளர் (நிலை 5) | Level 10 - 20600-75900 | 1 | 1 | | |
| 4 | உதவியாளர் | Level 10 - 20600-75900 | 1 | - | 1 | |
| 5 | இளநிலை உதவியாளர் | Level 8 - 19500-71900 | 5 | 4 | 1 | |
| 6 | தட்டச்சர் | Level 8 - 19500-71900 | 1 | - | 1 | |
| 7 | வருவாய் உதவியாளர் | Level 8 - 19500-71900 | 3 | 3 | - | |
| 8 | பதிவரை எழுத்தர் | Level 2 - 15900-58500 | 1 | - | 1 | |
| 9 | அலுவலக உதவியாளர் | Level 1 - 15700-58100 | 3 | 2 | 1 | |
| | பொறியியல் பிரிவு | | | | | |
| 10 | நகராட்சி பொறியாளர் (நிலை 3) | Level 20 - 37600-138500 | 1 | - | 1 | |
| 11 | பணி மேற்பார்வையாளர் | Level 11 - 35400-130400 | 1 | 1 | - | |
| 12 | வரைவாளர் (நிலை 3) | Level 11 - 35400-130400 | 1 | - | 1 | |
| 13 | பணி ஆய்வாளர் | Level 5 - 18200-67100 | 2 | - | 2 | |
| 14 | மின்பணியாளர் (நிலை 2) | Level 8 - 19500-71900 | 1 | 1 | - | |
| 15 | பொருத்துநர் (நிலை 2) | Level 8 - 19500-71900 | 1 | 1 | - | |
| | நகரமைப்பு பிரிவு | | | | | |
| 16 | நகரமைப்பு ஆய்வாளர் | Level 11 - 35400-130400 | 1 | 1 | - | |
| | பொது சுகாதாரம் பிரிவு | | | | | |
| 17 | சுகாதார ஆய்வாளர் | Level 11 - 35400-130400 | 1 | 1 | - | |
| 18 | சுகாதார மேற்பார்வையாளர் | Level 3 - 16600-60800 | 4 | 3 | 1 | |
| 19 | கள உதவியாளர் | Level 6 - 18500-68000 | 1 | 1 | - | |
| | | மொத்தம் | **31** | **21** | **10** | |

பழைய ஆணைகளின்படி தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் பணியிலுள்ள மிகை பணியாளர்கள்

| வ. எண் | பணியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வருவாய் உதவியாளர் | 2 |
| 2 | தெருவிளக்கு உதவியாளர் | 1 |
| 3 | கணினி இயக்குபவர் | 1 |
| 4 | ஓட்டுநர் | 1 |
| 5 | குழாய் ஆய்வாளர் | 2 |
| 6 | கைபம்ப் பராமரிப்பாளர் | 1 |
| 7 | இரவு காவலர் | 3 |
| 8 | வடிகட்டி படுகை இயக்குபவர் | 3 |
| 9 | மதகு திறப்பாளர் | 1 |
| 10 | மேல்நிலை தொட்டி சுத்திகரிப்பாளர் | 1 |
| 11 | மீட்டர் ரீடர் | 1 |
| 12 | தலைமை நீரேற்று நிலைய இயக்குபவர் | 1 |
| 13 | பேருந்து நிலைய வரிவசூலர் | 1 |

| | | |
|---|---|---|
| 14 | தூய்மை பணியாளர் | 32 |
| | | 51 |

**ஒப்பந்த அடிப்படை பணியாளர்கள்**

| வ. எண் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பரப்புரையாளர் | 5 |
| 2 | டெங்கு பணியாளர் | 20 |
| 4 | ஓட்டுநர் | 3 |
| 5 | அம்மா உணவகம் | 12 |
| | மொத்தம் | |

**குடிநீர் விநியோகம்**

அம்பாசமுத்திரம் நகராட்சியின் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் தாமிரபரணி ஆற்றினை நீராதரமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. இதனுடைய நீரேற்று நிலையங்கள் கோடாரங்குளம், ஊர்காடு சுடலை கோவில் மற்றும் ஊர்காடு இராமர் கோவில் ஆகிய மூன்று இடங்களில் அமைந்துள்ளது. இதன்மூலம் அம்பாசமுத்திரம் நகருக்கு தினசரி 35.00 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போதைய மக்கள் தொகையின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 96லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இந்நகரத்தில் 78.89 கிலோ மீட்டர் நீளத்தில் குடிநீர் விநியோக குழாய்கள் பொருத்தப்பட்டு பிரதான பகுதிகளுக்கும், விரிவாக்க பகுதிகளுக்கும், குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நிலத்தடி நீர்மட்டம் 12 மீட்டராக உள்ளது. வீட்டு இணைப்புகள் 9217, வணிக இணைப்புகள் 237 மற்றும் தொழிற்சாலை இணைப்புகள் 2 மொத்தம் 9456.

சுப்பிரமணியபுரத்தில் 9.00 இலட்சம் லிட்டர் மற்றும் 0.30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டியும், துர்க்கையம்மன் கோவில் அருகில் 5.00 இலட்சம் லிட்டர், வேலாயுதநகரில் 2.00 இலட்சம் லிட்டர், ஊர்காட்டில் 1.00 இலட்சம் லிட்டர், கோவில்குளம் 0.60 இலட்சம் லிட்டர் மற்றும் ஆர்.எஸ்.காலனியில் 0.60 இலட்சம் லிட்டர், சுப்பிரமணியபுரம் பொத்தை 0.60 இலட்சம் லிட்டர் மற்றும் ஊர்காடு மேலக்காலனி 0.60 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டிகள் அமைந்துள்ளன. மேற்படி நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் சிறுமின் விசை குடிநீர் தொட்டிகள் ஆகியவற்றின் மூலமாக 37.20 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

குடிநீர் திட்டங்கள்

| வ. எண் | திட்டம் | துவக்க ஆண்டு | ஆதாரம் | வடிவமப்பு அளவு (MLD) | வினியொகம் (MLD) |
|---|---|---|---|---|---|
| 1 | கொடாரகுளம் | 1977 | தாமிபரணி | 1.70 | 1.50 |
| 2 | ஊர்காடு சுடலைகோயில் | 1994 | „ | 2.00 | 1.00 |
| 3 | ஊர்காடு ராமர்கோயில் | 2008 | „ | 1.00 | 1.00 |
| | மொத்தம் | – | – | 4.70 | 3.50 |

குடிநீர் ஆதாரங்கள்

| வ. எண் | குடிநீர் ஆதாரம் | எண்ணிக்கை | விவரம் |
|---|---|---|---|
| 1 | மேல்நிலை நீர் தேக்க தொட்டி | 7 | 10.40 ல.லி. |
| 2 | தரைமட்ட நீர் தேக்க தொட்டி | 2 | 9.30 ல.லி. |
| 3 | சிறுமின் விசை பம்பு | 51 | |
| 4 | கை விசை பம்பு | 103 | |

வீட்டு இணைப்பு கட்டணம்

அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் புதிய வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு மதிப்பீடு தயார் செய்வதற்காக சாலை பராமரிப்பு கட்டணம் சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 748/08/குவ2 நாள்21.09.2009ன் படி முந்தைய ஆண்டின் சாலை பராமரிப்பு கட்டணத்திலிருந்து 5% உயர்த்த அறிவுரை வழங்கி உள்ளார்கள். ஆகையால் ஏற்கனவே உள்ள 2022–23 ஆம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு கட்டண தொகையில் 5% உயர்த்தி 2023–24 ஆம் ஆண்டிற்கு (01.04.2023 முதல் 31.03.2024 வரை) கீழ்காணும் விபரப்படி சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வைப்பு தொகை வீடு ரூ. 7,500/– வணிகம் ரூ. 15,000/– (ரூபாயில்)

| சாலை விபரம் | 0 முதல் 30 மீட்டர் நீளத்திற்கு | | 30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | |
|---|---|---|---|---|
| | 2022–23 ம் ஆண்டின் கட்டணம் | 5% உயர்த்தப்பட்ட கட்டணம் 2023–24 | 2022–23 ம் ஆண்டின் கட்டணம் | 5% உயர்த்தப்பட்ட கட்டணம் 2023–24 |
| கருங்கல் சாலை | 1970 | **2070** | 3130 | **3290** |
| தார்சாலை | 4265 | **4480** | 5390 | **5660** |
| சிமெண்ட் சாலை | 4915 | **5170** | 6050 | **6360** |

சாலைகள்

| வகைபாடு | தார் சாலை | | சிமெண்ட் சாலை | | பேவர் பிளாக் சாலை | | மண் சாலை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண். | நீளம் (கி.மீ) | எண். | நீளம் (கி.மீ) | எண். | நீளம் (கி.மீ) | எண். | நீளம் (கி.மீ) | எண். | நீளம் (மீ) |
| சாலை | 296 | 51.633 | 68 | 7.293 | 71 | 7.167 | 8 | 1.730 | 443 | 67.823 |
| தெரு | 43 | 4.234 | 74 | 5.747 | 57 | 3.758 | 2 | 0.235 | 176 | 13.974 |
| வழிபாதை | 3 | 0.156 | 114 | 6.523 | 41 | 2.304 | 1 | 0.041 | 159 | 9.024 |
| மொத்தம் | **342** | **56.023** | **256** | **19.563** | **169** | **13.229** | **11** | **2.006** | **778** | **90.821** |

வடிகால்

| வகைபாடு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| சாலை | 269 | 37.577 |
| தெரு | 84 | 7.258 |
| வழிபாதை | 86 | 4.529 |
| மொத்தம் | **439** | **49.364** |

தெரு விளக்குகள்

| வ எண் | விளக்கு வகைபாடு | வாட்ஸ் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | LED | 40 | 1192 |
| 2 | உயர் கோபுரம் | 400 | 8 |
| | மொத்தம் | | 2614 |

ஆண்டு வரவு செலவு 2023–24

| வ. எண் | விவரம் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| வரவினங்கள் | | |
| 1 | வரி இனங்கள் | 1.98 |
| 2 | ஈடு செய்யப்பட்ட வருவாய் | 0.23 |
| 3 | வரி இல்லாயினங்கள் | 0.18 |
| 4 | கட்டணங்கள் | 2.22 |
| 5 | விற்பனை மற்றும் வாடகை | 0.12 |
| 6 | மான்யங்கள் | 11.20 |
| 7 | முதலீடுகள் வருவாய் | 0.01 |
| 8 | வட்டி ஈட்டப்பட்டது | 0.18 |
| 9 | இதர வருவாய் | 0.15 |
| | மொத்த வரவினங்கள் | **16.27** |
| செலவினங்கள் | | |
| 1 | ஊதியம் | 5.70 |
| 2 | நிர்வாக செலவுகள் | 1.07 |
| 3 | பராமரிப்பு செலவுகள் | 5.43 |
| 4 | வட்டி மற்றும் நிதி செலவினங்கள் | 0.37 |
| 5 | மூலதன செலவு | 0.08 |
| 6 | தேய்மானம் | 5.96 |
| 7 | கடந்த ஆண்டிற்கான செலவினங்கள் | 0.03 |
| | மொத்த செலவினங்கள் | **18.64** |
| | நிகர பற்றாக்குறை | 2.37 |

கழிவுநீர் சுத்திகரிப்பு

அம்பாசமுத்திரம் நகராட்சியில் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் தலைமையில் 06.09.2021 அன்று தாமிரபரணி ஆய்வுகுழு Sub-committee ஸ்தல ஆய்வின் போது அம்பாசமுத்திரம்

நகராட்சி பகுதியில் 1. வார்டு 13 சங்கரன்கோவில் சாலை (BOD:66.6), 2. வார்டு 10 கன்னிவிநாயகர்கோவில் தெரு(BOD:23.2), 3. வார்டு 9 மேலபாளையம் தெற்கு ரதவீதி(BOD:69.6), 4. வார்டு 9 மேலபாளையம் கீழ ரதவீதி (BOD: 42.4), 5. வார்டு 7 சங்கர் தெரு(BOD: 27.2), 6. வார்டு 6 புதுகிராமம் தெரு(BOD:87.6), 7. வார்டு 5 கீழ திருமஞ்சன சாலை (BOD:393), 8. வார்டு 5 கல்லிடைகுறிச்சி மெயின்ரோடு பாலம் (BOD:204) ஆகிய இடங்களில் உள்ள கழிவுநீர் நதியுண்ணி கால்வாயில் கலக்கும் இடங்களில் கழிவுநீர் மாதிரியினை பகுப்பாய்வு செய்ய அறிவுறுத்தி உள்ளார்கள். அதன் அடிப்படையில் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் திருநெல்வேலி மூலம் மாதிரிகளை சேகரித்து பரிசோதனை செய்ததில் 5 வது வார்டு கீழ திருமஞ்சன சாலை மற்றும் கல்லிடைகுறிச்சி மெயின்ரோடு (பாலம்) ஆகிய இரு இடங்களில் BOD நிர்ணயிக்கப்பட்ட அளவு Central Pollution Control Board 30mg/II விட கூடுதலாக உள்ளதால் மேற்காண்ட இரு இடங்களில் இருந்து கழிவு நீர் வாகைக்குளம் பொட்டல் உரக்கிடங்கிற்கு குழாய் மூலம் கொண்டு வரப்பட்டு சுத்திகரிக்க ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் UnTied Grand 2021–22ன் கீழ் DEWAT System அமைக்கும் பணி மேற்கொள்ள 19.01.2022 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது Collection sump, Anaerobic filter மற்றும் settler அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இணைப்பு குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. நதியுண்ணி கால்வாயில் கழிவுநீர் கலக்கும் மீதமுள்ள 6 இடங்களில் கழிவுநீரை சுத்திகரிக்க தூய்மை இந்திய திட்ட நிதியின் கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்க திட்ட கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது

மனித கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம்

அம்பாசமுத்திரம் நகராட்சி, மணிமுத்தாறு பேரூராட்சி மற்றும் கல்லிடைகுறிச்சி பேரூராட்சியில் உருவாகும் மனித கசடு கழிவுகளை சுத்திகரிப்பு செய்ய வாகைக்குளம் பொட்டல் உரக்கிடங்கில் நில அளவை எண்.112 ல் 5.00 ஏக்கர் (24500.00 ச.மீ) பரப்பளவில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018-19 மற்றும் தூய்மை இந்தியா திட்ட பங்களிப்புடன் ரூ.315.00 இலட்ச மதிப்பீட்டில் மனித கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டுள்ளது.

இந்த சுத்திகரிப்பு நிலையம் தினம் 30 KLD கொள்ளளவு கொண்ட மனித கசடு கழிவுகளை சுத்திகரிப்பு செய்யும் வகையில் கட்டப்பட்டுள்ளது. தற்போது கசடு சுத்திகரிப்பு மேலாண்மை பணிகள் முழுவதும் முடிவுற்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் செயற்பொறியாளர் திருநெல்வேலி அவர்களின் கடிதம் F.2973 TNV/RS/DEE/TNPCB/TNV/A/2021 DT:09-09-2021ன்படி CTO பெறப்பட்டு 01.11.2021 முதல் அதற்கென அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

கழிவு நீர் வாகனங்களுக்கு உரிம கட்டணமாக 2 ஆண்டுக்கு ரூ.2000ம் கழிவு நீர் கொட்ட நடை ஒன்றுக்கு ரூ.200ம் வசூலிக்கப்படுகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் துணைவிதிகளின்படி அம்பாசமுத்திரம் நகராட்சி, மணிமுத்தாறு பேரூராட்சி மற்றும் கல்லிடைகுறிச்சி பேரூராட்சி ஆகியவை மேற்படி மனித கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய பராமரிப்புக்கான செலவினங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தின்படி பகிர்ந்து கொள்கிறது.

தற்போது அம்பாசமுத்திரம் மற்றும் பாப்பாகுடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 12 கிராம ஊராட்சிகளையும் இத்திட்டத்தில் cleaster இணைக்க நகர் மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு செயல் முறையில் இருந்து வருகிறது .

மேலும் அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியிலுள்ள 14 கழிவுநீர் வண்டி இயக்குபவர்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டு GPRS பொருத்தும் பணி முடிவு பெற்றுள்ளது. மேற்படி கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் பயன்பாட்டில் உள்ளதால் இந்நகர் பகுதியில் அவ்வப்போது தனியார் வாகனத்தினால் எடுக்கப்படும் கசடு கழிவு நீர் வேறு எங்கும் கொட்டப்படுவதில்லை என உறுதிசெய்யப்பட்டது.

### பொது கழிப்பிடங்கள்

இந்நகராட்சியில் 9 பொது கழிப்பிடங்கள் மற்றும் 20 சமுதாய கழிப்பிடங்களும் உள்ளன. இவை அனைத்தும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

### தனிநபர் கழிப்பிடங்கள்

மொத்தமுள்ள 16616 குடியிருப்பு வீடுகளில் 16,350 வீடுகளில் தனிநபர் கழிப்பிடங்கள் உள்ளன. மீதமுள்ள 366 வீட்டில் வசிக்கும் பொதுமக்கள் சமுதாய கழிப்பிடங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

### திடக்கழிவு மேலாண்மை

இந்நகராட்சியில் உள்ள மொத்தமுள்ள 21 வார்டுகளில் தற்போதைய மக்கள் தொகை 38850, வீடுகள் 16616, கடைகள் 1978, நிறுவனங்கள் 41 இருந்து பெறப்படும் 12.46 டன் அளவிற்கு தினமும் கழிவுகள் கையாளப்பட்டு நுண்ணுயிர் உரம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் தலா 7 வார்டுக்கு ஒரு நுண்ணுயிர் செயலாக்க மையம் வீதம் 3 நுண்ணுயிர் செயலாக்க மையம் சக்தி நகர், அண்ணா நகர் ஆகிய இடங்களில் 2019 ல் 2 மையமும் 2020ல் சங்கரன் கோவில் ரோட்டில் ஒரு நுண்ணுயிர் செயலாக்க மையமும் அமைக்கப்பட்டது.

மேற்படி மூன்று நுண்ணுயிர் செயலாக்க மையம் 9.0 டன் அளவுள்ள மக்கும் கழிவுகளை கையாள்வதற்கான கொள்ளவை அமையப்பெற்றது. அவ்வாறு செயல்பட்டுவரும் மூன்று நுண்ணுயிர் செயலாக்க மையத்திலும் மேலும் அண்ணா நகர் நுண்ணுயிர் செயலாக்க மையத்தில் வளம் மீட்பு பூங்கா (RRC) அமைக்கப்பட்டு மேற்படி மூன்று நுண்ணுயில் செயலாக்கமையத்தில் இருந்து அவ்வப்போது பெறப்படும் மறுசுழற்ச்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக் கழிவுகளை பைலிங் இயந்திரம் மூலம் பேக்கிங் செய்யப்பட்டு இந்தியா சிமெண்ட் (பி) லிட். மூலம் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டுவருகிறது. நாளது தேதி வரை 82.25 டன் மறுசுழற்ச்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் நுண்ணுயிர் செயலாக்கமையம் ஆரம்பிப்பதற்கு முன்னர் கொட்டப்பட்ட 20,500 Cu.M. கழிவுகளை ஒன்றான Bio Mining பணி மூலம் தரம் பிரிக்க 24.10.2018 அன்று பணியாணை வழங்கப்பட்டு அனைத்து குப்பைகள் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மீட்கப்பட்ட நிலத்தில் 719 மர கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணி**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 32945/2022/ EA2-SWM-7 நாள் 10.01.2023ன்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளான வீடுகள் மற்றும் வனிக நிறுவனங்களில் இருந்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து மறு சுழற்ச்சி செய்யும் இடத்திற்கு கொண்டு வர தேவையான பணியாளர்கள், வாகனங்கள் மற்றும் தளவாட சாமன்கள் ஆகியவைகளை வெளிக்கொணர்வு முகமை மூலம் (Outsourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஜீன் 2023 முதல் அம்பாசமுத்திரம் நகராட்சி வசமுள்ள 8 மின்கல வண்டிகள், 9 சிறு வணிக வாகனங்கள் மற்றும் 1 கனரக வணிக வாகனம் வாடகை அடிப்படையில் ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைக்கப்பட்டு அனைத்து வீடுகள் மற்றும் வனிக நிறுவணங்களில் இருந்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து மறு சுழற்ச்சி செய்யும் இடத்திற்கு கொண்டு செல்லுதல் மேலும் பேருந்து நிலையம், சந்தை மற்றும் பேருந்து செல்லும் சாலைகளில் தூய்மை பணி மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**வாகனங்கள்**

| வ.எண் | வாகனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொலிரோ | 3 |
| 2 | ஸ்காா்பியோ | 1 |
| 3 | மினி லாரி | 1 |
| 4 | மினி ட்ரக் | 11 |
| 5 | மின்கல வண்டி | 8 |
| | மொத்தம் | 24 |

**உபகர்ணங்கள் / இயந்திரங்கள்**

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | குப்பை அறைப்பான் | 3 | |
| 2 | பைலிங் இயந்திரம் | 1 | அண்ணாநகர் |
| | மொத்தம் | 4 | |

அம்மா உணவகம்

| வ. எண் | விவரம் | அளவு | மாத வரவு/ செலவு (ரூ) |
|---|---|---|---|
| மாதாந்திர செலவு | | | |
| 1 | பணியாளர்கள் ஊதியம் | 12 நபர் x ரூ.250 | 90,000 |
| 2 | காய்கறிகள் | | 26,630 |
| 3 | எறிவாயு | 22 எண் x ரூ.2537 | 55,738 |
| 4 | பலசரக்கு | | 67,328 |
| 5 | அரிசி | 1200 கி. x ரூ.1 | 1,225 |
| 6 | பால் | 210 லி x ரூ.40 | 8400 |
| | மொத்த செலவு | – | 2,49,321 |
| மாதாந்திர வரவு | | | |
| 1 | காலை இட்லி | எண் x ரூ. 1 | |
| 2 | மதியம் சாம்பார் சாதம் | எண் x ரூ. 5 | |
| 3 | மதியம் தயிர் சாதம் | எண் x ரூ. 3 | |
| | மொத்த வரவு | – | 1,00,716 |
| | நிகர செலவு | | 1,48,605 |

சொத்துவரி சீராய்வு

15வது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ருட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது. சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building)

| பரப்பளவு (ச.அடி) | ஏற்கனவே உள்ள மண்டல அடிப்படை மதிப்பு ரூ | உயர்வு செய்வதற்கான காரணி | A மண்டலம் அடிப்படை மதிப்பு ரூ | B மண்டலம் அடிப்படை மதிப்பு ரூ | C மண்டலம் அடிப்படை மதிப்பு ரூ |
|---|---|---|---|---|---|
| <= 600 | 1.00 | 1.25 | 1.25 | 1.00 | 0.65 |
| 601-1200 | 1.00 | 1.5 | 1.50 | 1.20 | 0.75 |
| 1201-1800 | 1.00 | 1.75 | 1.75 | 1.40 | 0.90 |
| > 1800 | 1.00 | 2 | 2.00 | 1.60 | 1.00 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் ( Non - Residential Building)

| வகைப்பாடு | ஏற்கனவே உள்ள மண்டல அடிப்படை மதிப்பு ரூ (A/B/C) | உயர்வு செய்வதற்கான காரணி | A மண்டலம் அடிப்படை மதிப்பு ரூ | B மண்டலம் அடிப்படை மதிப்பு ரூ | C மண்டலம் அடிப்படை மதிப்பு ரூ |
|---|---|---|---|---|---|
| தொழிற்சாலைகள் | 2.00 / 1.60 / 1.00 | 1.75 | 3.50 | 2.10 | 1.30 |
| வணிக கட்டடங்கள் | 3.00 / 2.40 / 1.50 | 2 | 4.00 | 3.20 | 2.00 |
| பள்ளி/கல்லூரி கட்டடங்கள் | 1.50 / 1.20 / 0.75 | 1.75 | 2.65 | 2.10 | 1.30 |

காலிமனை வரி சீராய்வு

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100% உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

| வகைப்பாடு | ஏற்கனவே உள்ள மண்டல அடிப்படை மதிப்பு ரூ | உயர்வு செய்வதற்கான காரணி | A மண்டலம் அடிப்படை மதிப்பு ரூ | B மண்டலம் அடிப்படை மதிப்பு ரூ | C மண்டலம் அடிப்படை மதிப்பு ரூ |
|---|---|---|---|---|---|
| குடியிருப்புகள் காலிமனை | A Zone - 0.10<br>B Zone - 0.15<br>C Zone - 0.20 | 100 % | 0.20 | 0.30 | 0.40 |
| தொழிற்சாலைகள் காலிமனை | A Zone - 0.10<br>B Zone - 0.15<br>C Zone - 0.20 | 100 % | 0.40 | 0.60 | 0.80 |
| வணிக பயன்பாட்டு காலிமனை | A Zone - 0.10<br>B Zone - 0.15<br>C Zone - 0.20 | 100 % | 0.60 | 0.90 | 1.20 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி காலிமனை | A Zone - 0.10<br>B Zone - 0.15<br>C Zone - 0.20 | 100 % | 0.40 | 0.60 | 0.80 |

- சொத்துவரி சீராய்வுக்கு முன்னர் (31.03.2022) நடப்பு கேட்பு : ரூ. 90.71 இலட்சம்
- சொத்துவரி சீராய்வுக்கு பின்னர் நடப்பு ஆண்டு கேட்பு : ரூ.143.83 இலட்சம்
- உயர்த்தப்பட்ட சொத்துவரி கேட்பு : ரூ. 53.13 இலட்சம்
- உயர்த்தப்பட்ட சொத்துவரி சதவிதம் : 58.56 %

குத்தகை இனங்கள்

இந்நகராட்சியில் 3 ஆண்டு குத்தகை இனங்கள் 3 எண்ணிக்கையும் 9 ஆண்டு குத்தகை இனங்கள் 33 எண்ணிக்கையும் உள்ளன. இவற்றில் குத்தகை வாலம் முடிவுற்ற 8 கடைகளின் ஏல அறிக்கை வெளியிடப்பட்டு பொது ஏலம் விடப்பட உள்ளது.

சொத்துவரி வசூல்

2023–2024ஆம் ஆண்டின், 18891 சொத்துவரி விதிப்பு விதிப்புகளின் நிலுவை கேட்பு ரூ. 63.53 இலட்சம் மற்றும் நடப்பு கேட்பு ரூ.173. 44 இலட்சம் சேர்த்து மொத்த கேட்பு ரூ. 236.97 இலட்சத்தில் ரூ. 197.22 இலட்சம் (83.22 சதவிகிதம்) 31.03.2024ல் வசூல் செய்யப்பட்டுள்ளது.

தொழில்வரி வசூல்

தீர்மான எண் 351/06.09.2018ன்படி 01.10.2018 முதல் கீழ்கண்டவாறு தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | சராசரி அரையாண்டு வருமானம் | 01.10.2018 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்வரி (அரையாண்டு ஒன்றுக்கு) (ரூ.) |
|---|---|---|
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் ரூ.30,000 வரை | 165 |
| 3 | ரூ. 30,001 முதல் ரூ.45,000 வரை | 400 |
| 4 | ரூ. 45,001 முதல் ரூ.60,000 வரை | 800 |
| 5 | ரூ. 60,001 முதல் ரூ.75,000 வரை | 1185 |
| 6 | ரூ.75,001ம் அதற்கு கூடுதல் | 1250 |

2023–2024ஆம் ஆண்டில், 404 தனிநபர் தொழில்வரி விதிப்பு கேட்பு ரூ. 4.51 இலட்சமும், 115 நிறுவனங்களின் தொழில்வரி விதிப்பு கேட்பு ரூ.36.41 லட்சமும் சேர்த்து மொத்தம் 519 வரிவிதிப்பில் ரூ.40.92 இலட்சம் கேட்பில் ரூ. 40.46 இலட்சம் ( 98.88 சதவிகிதம்) 31.03.2024ல் வசூல் செய்யப்பட்டுள்ளது.

வரியில்லா இனங்கள் வசூல்

2023–2024ஆம் ஆண்டில், 56 எண்ணிக்கையிலான வரியில்லா இனங்களின் நடப்பு வரிவிதிப்பின் கேட்பு ரூ.17.04 இலட்சமும் (100 சதவிகிதம்) 31.03.2024ல் வசூல் செய்யப்பட்டுள்ளது. நிலுவை இனத்தில் ரூ.26.24 இலட்சம் கேட்பில் ரூ. 0.50 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் கட்டணம் வசூல்

2023–2024 ஆம் ஆண்டில், 9289 எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகளின் கேட்பு ரூ.128.54 இலட்சத்தில் ரூ.106.70 இலட்சம் (83.01 சதவிகிதம்) 31.03.2024ல் வசூல் செய்யப்பட்டுள்ளது.

காலியிட வரி வசூல்

2023–2024ஆம் ஆண்டில், 383 எண்ணிக்கையிலான காலியிடவரி இனங்களின் வரிவிதிப்பின் கேட்பு ரூ. 4.19 இலட்சமும் வசூல் ரூ 2.98 (71.04 சதவிகிதம்) 31.03.2024ல் வசூல் செய்யப்பட்டுள்ளது.

பேருந்து நிலையம்

பேருந்து நிலையம் “D” தரம் கொண்ட 10 பேருந்துகள் நிறுத்த இடவசதி உள்ளது. 2023–2024ஆம் ஆண்டில் சுங்க கட்டணம் ரூ.1.70 லட்சம் நகராட்சி மூலம் வசூலிக்கப்பட்டது.

**மயானங்கள்**

நகராட்சியில் 11 மயானங்கள் உள்ளன. தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2023–24ன்படி நவீன எரிவாயு தகன மேடை அமைக்க மேல அம்பாசமுத்திரம் சின்னசங்கரன் கோயில் செல்லும் சாலை பகுதியில் புல எண் 483/1ல் 16 செண்ட் இடம் தானமாக பெறப்பட்டுள்ளது. இங்கு ரூ.2.28 கோடி மதிப்பீட்டில் புதிய நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**சந்தைகள் / வணிக வளாகங்கள்**

சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் அசல் வழக்கு எண் W.P(MD) 10892, 10893, 16514 மற்றும் 15185/2017 என்ற வழக்குகளின் நீதிப் பேராணையின் படி 1.5 ஏக்கர் அரசு தரிசு நிலமாக இருந்து வரும் புல எண் 370எ/10 ல் தனியர்கள் திருமதி. சுபத்ரா, திருமதி. மஞ்சுளாதேவி, திருமதி. சுகன்யா ஆகியோர் நடத்திவந்த சந்தையை நகராட்சி வசம் ஒப்படைக்க ஆணையிடப்பட்டது. அதன்படி நகராட்சியால் வாரச்சந்தை நடத்தி வருவதுடன் அதிலிருந்து வரும் தொகையை தனி வங்கி கணக்கு தொடங்கி வைப்பீடு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி இடத்தை நகராட்சி வசம் ஒப்படைக்க மாவட்ட வருவாய் அலுவலருக்கு இவ்வலுவலக ந.க.எண் 146 /2016 /அ1 நாள்: 24.03.2022படி கருத்துரு சமர்க்கப்படுள்ளது.

## 2023–2024ம் ஆண்டில் நடைபெறும் திட்டப் பணிகள்

**1) 15வது நிதி ஆணையகுழு மான்யம்**

15வது நிதி ஆணையகுழுவின் இணைக்கப்பட்ட மான்யம் 2023–24ன் கீழ் மரகன்று நடுதல், குடிநீர் மோட்டார் கொள்முதல், ஊர்காடு குடிநீர் திட்ட சுற்றுச்சுவர், புதிய தெருவிளக்குகள் அமைத்தல், சாலை பணிகள், 2 சிறிய ரக திடக்கழிவு வாகனங்கள் மற்றும் நகர் நல மையம் ஆகிய 7 பணிகள் ரூ.176.94 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

**2) கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT)**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–24ன் கீழ் ரூ.119.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 சாலை பணிகள், பெரியகுளம் மேம்பாடு பணி மற்றும் NGO காலனியில் பூங்கா அமைத்தல் ஆகிய பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

**3) நமக்கு நாமே திட்டம்**

நமக்கு நாமே திட்டம் 2022–23ன் கீழ் ரூ.8.50 இலட்சம் பொதுமக்கள் பங்களிப்புடன் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் மணலோடை தெருவில் அங்கன்வாடி கட்டிடமும் அம்பை நகராட்சி முக்கிய பகுதிகளில் கண்காணிப்பு கேமராகள் (CCTV) அமைக்கும் பணியும் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்றது. 2023 – 24ம் ஆண்டிற்கு பொது மக்கள் பங்களிப்பு தொகை பெற நடவடிக்கையில் உள்ளது.

**4) தற்போதுள்ள தெருவிளக்குகளை LEDயாக மாற்றுதல் 2022–23**

மாநில நகர்புற உள்கட்டமைப்பு மேம்பாடு நிதி உதவியுடன் (5% வட்டியுடன் கூடிய கடன்) ரூ.149.19 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சியில் தற்போதுள்ள 1595 தெருவிளக்குகளை LEDயாக மாற்ற பணியாணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

5) தூய்மை இந்தியா இயக்கம் 2.0 (SBM 2.0)

தூய்மை இந்தியா இயக்க திட்டம் 2.0 கீழ் 2023–24ம் ஆண்டில் ரூ.43.00 இலட்சம் மதிப்பீட்டில் வாகைகுளம் பொட்டல் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு கழிவு பொருட்கள் மீட்பு வசதி கூடம் அமைக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

6) அம்ருத் 2.0 (AMRUT 2.0)

அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணி மேற்கொள்ள ரூ.36.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் ஒன்றிய அரசு மானியமும் 50 சதவீதம் மாநில அரசு மானியமும் மற்றும் 20 சதவீதம் நகராட்சி பங்களிப்பும் அடங்கும். இத்திட்டத்தில் 3 கூடுதல் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல், 92.840 கி.மீ. நீளமுள்ள அனைத்து குடிநீர் குழாய்களையும் புதுப்புத்தல், 13132 வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள 20.03.2023 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்போது 70 சதவீத பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

7) முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்

முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின்கீழ் அம்பாசமுத்திரம் நகராட்சி வசமுள்ள 6 பள்ளிகளின் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 434 மணவர்களுக்கும் கல்லிடைகுறிச்சி பேரூராட்சியிலுள்ள 4 ஊராட்சி ஒன்றிய பள்ளிகளின் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 453 மணவர்களுக்கும் மொத்தம் 887 மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி மாணவர்களுக்கு சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது.

(கையொப்பம்) 24/7/24
ஆணையாளர்
அம்பாசமுத்திரம் நகராட்சி
(கையொப்பம்) 24/7/24